நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

முன்னிலை : திரு.P.ஆசைமருது பி,ஏ., எல்.எல்.பி.,

நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ), தேனி.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் நாள் செவ்வாய்கிழமை

குற்றவியல் பல்வகை மனு எண்.826/2026

**CNR No. TNTH020012732026**

*****

பவித்ரா (30/2026),
D/o. V.கண்ணன்,
62/63, மகாத்மா நகர்,
மாரியம்மன் கோவின்பட்டி தெரு,
பி.சி.பட்டி, தேனி-625531 ...மனுதாரர்/உரிமையாளர்

//எதிர்//

அரசுக்காக – காவல் ஆய்வாளர்,
சைபர் கிரைம் காவல்நிலையம்,
CCD-III,
தேனி மாவட்டம்,
CSR.No.0124/2026. ...எதிர்மனுதாரர் /குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்றைய தினம் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/உரிமையாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.திவாகர், B.A., L.L.B., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கிறிஞர் நிலை-II அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

1) மனுதாரர்/உரிமையாளர் தேனி மாவட்ட சைபர் கிரைம் காவல் நிலைய குற்ற எண்.0124/2026 வழக்கில் கைப்பற்றப்பட்டு முடக்கப்பட்டுள்ள பணம் ரூ.51,284/- ஐ மனுதாரர் வசம் ஒப்படைக்க கோரி இம்மனுவை U/s.497 & 503 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்.

**2) மனுவின் சுருக்கம்.**

இந்த வழக்கில் மனுதாரர் மற்றும் சி.எஸ்.ஆர். எண்.0124/2026-ல் உள்ள உண்மையான புகார்தாரர் ஆவார். மனுதாரரின் அப்பா மாதா எர்த் மூவர்ஸ் என்ற பெயரில் தொழில் நடத்தி வருவதாகவும், கடந்த 10.02.2026 ம் தேதி, மேரி மாதா பள்ளியிலிருந்து என்று கூறி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வாடகைக்கு மிஷின் தேவை என்றும்,

அதற்கு முன்பணமாக ரூ.10,000 செலுத்தியுள்ளதாகவும், பின் தான் தவறுதலாக ஒரு பூஜ்ஜியம் அதிகமாக சேர்த்து ரூ.10,000 பதிலாக ரூ.1,00,000 அனுப்பிவிட்டதாக குறுஞ்செய்தி அனுப்பியதை நம்பி மனுதாரர் UPI No.8376889356 என்ற எண்ணிற்கு ரூ.50,000 மற்றும் ரூ.40,000 அனுப்பிவிட்டதாகவும், பின் தான் ஏமாற்றப்பட்டதை அறிந்து தேனி சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், காவல்துறை ஆய்வாளர் புகாரைப் பெற்றுக் கொண்டு விசாரித்து வழக்கு பதிவு செய்து CSR No.0124/2026 நகலை கொடுத்ததாகவும், மேற்படி காவல்துறையினர் மனுதாரர் அனுப்பிய பணம் வங்கிக் கணக்கானது BANDHAN BANK ACCOUNT NUMBER-20200135714285 எனவும், தற்போது அதில் ரூ.51284/- இருப்பதாகவும், அதை தற்போது FREEZE செய்துள்ளதாகவும், அதை மனுதாரரின் HDFC A/c No.50100114726561, IFSC Code: HDFC0000776, என்ற எண்ணில் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிட மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) அரசு மற்றும் எதிர்மனுதாரருக்கு தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது பதில் பெறப்பட்டது</u>.**

இவ்வழக்கில் புகார் சம்மந்தமாக விசாரணை செய்ததில் புகார்தாரரின் வங்கி கணக்கில் இருந்து ஆன்லைன் மூலம் ரூ.90,000/- ஏமாற்றி புகார்தாரரிடமிருந்து பணம் பறித்தது உண்மையென தெரியவந்தது. இவ்வகை வங்கி கணக்குகளானது போலியான விபரங்கள் கொடுத்து துவங்கப்பட்டிருப்பதால் இவ்வகை வங்கி கணக்குகளை (Mule Accounts) பயன்படுத்துபவர்களின் விபரங்களை பெறுவதில் சிக்கல்கள் உள்ளது. எனவே, இந்த வங்கி கணக்கில் உள்ள பணம் அனைத்துமே வாதிக்கு சொந்தமானதாகும். எனவே BANDHAN BANK ACCOUNT NUMBER-20200135714285-ல் நிறுத்தம் செய்து வைக்கப்பட்டுள்ள தொகையான Rs.51,284/-ஐ வாதிக்கு திரும்ப பெற்றுத்தருவதில் எந்தவித ஆட்சேபணை இல்லை என்பதையும் தேவைப்பட்டால் வாதியிடம் இந்த பணத்திற்கான பிணைபத்திரத்தை பெற்றுக் கொண்டு வழங்குவதற்கு ஆவண செய்யுமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**<u>4) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.</u>**

1) இவ்வழக்கில் இன்னும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படாமல் முதல் நிலை புலன்விசாரணை நிலையில் இருந்து வருவது தெரியவருகிறது.

2) இவ்வழக்கு மனுதாரரின் வங்கி கணக்கில் இருந்து எதிரியால் ஏமாற்றப்பட்ட

தொகையான ரூ.51,284/- ஐ Freeze செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

3) மனுதாரர் தரப்பில் மேற்படி தொகையை பொறுத்து இம்மனு அனுமதிக்கப்பட வில்லை என்றால் மேற்படி தொகையையும் எதிரி செலவழித்துவிடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்கள் மறுக்கும்படி இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

4) மேற்படி சைபர்கிரைம் போலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையிலும் மேற்படி மனுதாரர் கூறியுள்ள தொகையானது எதிரியின் வங்கி கணக்கில் Freeze செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளதையும், அதேபோல் மேற்படி தொகையை மனுதாரர் பெறுவதற்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளதையும் மறுக்கும்படியாக இல்லை.

5) எனவே மேற்படி வழக்கின் சூழ்நிலை, வழக்கின் தன்மை மனுதாரரின் தேவை ஆகியவற்றை கருத்தில் கொண்டு Freeze செய்யப்பட்ட தொகையான ரூ.51,284/- தொகையை மனுதாரரின் வங்கி கணக்கு எண். HDFC A/c No.50100114726561, IFSC Code: HDFC0000776, தேனி, அல்லிநகரம் கிளைக்கு அனுப்ப கீழ்க்கண்ட நிபந்தனையின் பேரில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

<u>**நிபந்தனைகள்.**</u>

1) மனுதாரருக்காக இரு ஜாமீன்தார்கள் ரூ.25,000 பிணைப்பத்திரம் எழுதி தர வேண்டும்.

2) மனுதாரர் வழக்கு விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும் என்றும், மேலும் மனுதாரர் மேற்படி வழக்கு சொத்தை பொறுத்து இந்நீதிமன்ற உத்தரவுபடியோ, அல்லது மாண்புமிகு மேல்நிலை நீதிமன்றத்தின் உத்தரவுபடியோ நடந்துகொள்ளவேண்டும்.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டபின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்து இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் நாள் செவ்வாய்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.03.17 14:14:17 +0530

நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),
தேனி.